ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1783/37 - 2012 නොවැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2012.11.09

*1783/37 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலக்கம் 1670/32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவை தொடர்பான சேவை பிரமாணக் குறிப்பு

2010.09.10 ஆந் திகதிய இலக்கம் 1670/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பு பின்வருமாறு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் மீது திருத்தம் செய்யப்படுகின்றது :-

06. **உத்தியோக தரத்திற்கு உரித்துடைய பதவிகள்**

6.2 இணைந்த அதிகாரிகளின் எண்ணிக்கை : 832 - { I, II, III } தரம்

10.3 **தரம் I இலிருந்து விசேட தரத்திற்குப் பதவி உயர்த்துதல்.**

10.3.1 பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை விசேட தரத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களின் மீது விசேட தரத்திற்குப் பதவி உயர்த்துவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அல்லது அமைச்சரவையினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

அதன் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர்-

(i) இலங்கைத் திட்டமிடல் சேவையில் 18 வருட சேவைக் காலத்தையும் மற்றும் தரம் I இல் 05 வருட சேவைக் காலத்தையும் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் பதவி உயர்விற்காகத் தகைமை பெறுவதற்கு முந்திய 05 வருட காலப் பகுதியினுள் உரிய தினங்களில் அனைத்து சம்பள ஏற்றங்களையும் ஈட்டியிருத்தல்.

(ii) பதவி உயர்விற்கு முந்திய 05 வருட காலப் பகுதியினுள் செய்த குற்றம் ஒன்றுக்காக ஒழுக்காற்றுத் தண்டனை ஒன்றுக்கு ஆளாகாதிருத்தல். (எச்சரித்தல் தவிர்ந்த)

(iii) அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கேற்ப பதவியுயர்விற்கு முந்திய 05 வருட காலப் பகுதிக்குள் திருப்திகரமான மட்டத்திலும் பார்க்க கூடிய செயலாற்றுகை மட்டத்தினை அடைந்திருத்தல்.

நியமன அதிகாரியினால் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் மூலம் மேற்படி தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை பரீட்சித்துப் பார்த்து செய்யப்படும் சிபாரிசுக்கேற்ப மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்களை சகல தகைமைகளையும் பூர்த்தி செய்யும் தினத்திலிருந்து நடைமுறைக்கு வருமாறு சேவையின் விசேட தரத்திலுள்ள வெற்றிடங்களின் மீது விசேட தரத்திற்கு பதவி உயர்த்துதல் நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

பீ. பி. ஜயசுந்தர,
செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2012, ஒற்றோபர் 31.

11-921

## திருத்தம்

**1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலைச் சிறுபற்று நில அபிவிருத்தி சட்டத்தின்கீழ் (தேயிலை பயிர்ச்செய்கை) மானியக் கட்டளை**

08.11.2012 ஆந் திகதிய 1783/26 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மேற்கூறப்பட்ட தலையங்கத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட பந்தி 4,

"4. அதிகார சபையினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கிணங்க நிலமானது ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளவிடத்து தேயிலைச் சிறுபற்று நிலம் அல்லது வேறு தேயிலைச் சிறு பற்று நிலம் முழுவதிலும் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாகத்தில் தாவர முறையில் வளர்க்கப்படும் தேயிலைச் செடிகளை மீள்நடுகை செய்வதற்கு கொடுக்கற்படற்பாலதான மாணியத்தொகை இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டயார் தொடர்பிலும் 3,000,000 ரூபாவாதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் முறையில் ஐந்து தவணைக் கொடுப்பனவுகளில் கொடுக்கவும் படலாம்".

என்பது,

"4. அதிகார சபையினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுககிணங்க நிலமானது ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளவிடத்து தேயிலைச் சிறுபற்று நிலம் அல்லது வேறு தேயிலைச் சிறுபற்று நிலம் முழுவதிலும் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாகத்தில் தாவர முறையில் வளர்க்கப்படும் தேயிலைச் செடிகளை மீள்நடுகை செய்வதற்கு கொடுக்கற்படற்பாலதான மானியத்தொகை இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டயர் தொடர்பிலும் 3,00,000 ரூபாவாதல் வேண்டுமென்பதுடன், பின்வரும் முறையில் ஐந்து தவணைக் கொடுப்பனவுகளில் கொடுக்கவும் படலாம்."

என திருத்தி வாசிக்கப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பீ. எல். யூ. திஸாநாயக்க,
மேலதிக செயலாளர் (அபிவிருத்தி),
செயலாளருக்காக,
பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு.

பெருந்தோட்ட கைததொழில் அமைச்சு,
55/75, வொக்சோல் வீதி,
கொழும்பு 2,
09.11.2012.

11- 969

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.